**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 06.08.2025**

**EA.No. 23/2019**

**in**

**EP.No. 17/2017**

**வழக்கு சாட்சி PW1.–தவச்செல்வி , க/பெ. கலியப்பெருமாள்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் விசாரணை செய்யப்படுகிறார் )

**2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் கிரையம் வாங்கிய சொத்தை காப்பாற்ற வேண்டி இடைக்கால மனு E.A 23/2019 தாக்கல் செய்துள்ளேன். 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களிடம் பவர் ஆவணத்தின்பேரில் நான் கிரையம் வாங்கினேன். சொத்து கிரையம் வாங்கும் முன்பு வில்லங்கச்சான்று மூல ஆவணங்கள் சரிபார்த்துதான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்து நான் விவசாயம் செய்துவந்த சொத்தாகும் . கிரையம் வாங்கும் முன்பே அந்த சொத்தில் விவசாயம் செய்துவந்தேன் என்றால் சரிதான். தேதி நினைவில்லை , மார்ச் மாதம் 2012–ல் நான் சொத்தினை நான் கிரையம் வாங்கினேன். நான் வாங்கிய சொத்து தொடர்பாக வழக்கு நிலுவையில் இருந்த விபரம் தெரிந்துதான் வாங்கினேன் என்றால் அத்தகைய விபரங்கள் நான் கிரையம் வாங்கியபோது தெரியவரவில்லை . நான் சொத்து கிரையம் வாங்கும் முன்பு வருவாய்த்துறை ஆவணங்கள் ராஜு பெயரில் இருந்தது. 2013–ல் நான் பட்டா எனது பெயருக்கு மாற்றினேன் . பட்டா பெயர் மாற்றம் செய்யும் முன்பு வருவாய்த்துறையினர் வந்து என் இடத்தினை பார்வையிட்டு பிறகு பெயர்மாற்றம் செய்தார்கள் என்றால் சரிதான் . உருளைக்கிழங்கு, பின்ஸ் ஆகிய காய்கரிகளை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறேன் . அசல்

வழக்கு 53/2012 என்ற வழக்கின் வாதியான சங்கரலிங்கம் என்ற சங்கருக்கு நான் இந்த மனு தொடர்புடைய நிலத்தில் கிரையம் வாங்கும் முன்பு விவசாயம் செய்துவந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும் . நான் கிரையம் வாங்கிய விபரமும் சங்கரலிங்கத்திற்கு தெரியும் . சங்கரலிங்கம் என்மீது உரிமையியல் வழக்கு எதுவும் தொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

**( 1 மற்றும் 2 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.08.06 13:56:14 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.